பஸ்பாகே கோராளே பிரதேச சபை - 2023

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பஸ்பாகே கோராளே பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்களுடன் கூடிய நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பஸ்பாகே கோராளே பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய

வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள்,

நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் சேமிப்பு வைப்புக் கணக்கிற்குரிய ரூபா 57,013 ஆன வட்டி மீளாய்வாண்டு இறுதியில் கிடைத்திருந்த போதும், பெற வேண்டிய வட்டி நிதிக்கூற்றுக்களில் கடன்படுனரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த வட்டித் தொகையை இனங்காண முடியாதிருந்ததுடன், பற்றுச் சீட்டு 2024 சனவரி மாதம் விநியோகிக்கப்பட்டுள்ளதால், கடன்படுனர் ஆக்கப்பட்டதென. | வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் கூட்டுத் தொகை ரூபா 186,249 ஆன 05 சொத்து விடயங்கள் மற்றும் கூட்டுத் தொகை ரூபா 333,828 ஆன 04 பொறுப்பு விடயங்களிற்கான அட்டவணைகள், கோவைகள் மற்றும் பதிவேடுகள் | இந்த கணக்கு விடயங்களிற்கான அட்டவணைகள் மற்றும் பதிவேடுகளை கடந்த ஆண்டு கணக்குகளின் புத்தகங்களிலும் கண்டறிய முடியாததுடன், முறையாக | கணக்கு மீதிகளை உறுதி செய்து கொள்ள தேவையான அட்டவணைகளை சரியாக பேணிக் கொள்ள வேண்டும். |

| | |
|---|---|
| சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் கணக்காய்வின் போது திருப்தி கரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | விடயங்கள் மாற்றப்படாத காரணத்தால் இந்த பிரச்சினை ஏற்பட்டுள்ளதென. |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (அ) | 128 பிரிவு | சபையினால் பொதுப் பணிகளிற்காக பயன்படுத்தும் ரூபா 52,710,635 பெறுமதியான 56 காணி மற்றும் கட்டிடங்களை சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இங்கு குறிப்பிடும் காணி மற்றும் கட்டிடங்களை எதிர்காலத்தில் சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பதென. | காணி மற்றும் கட்டிடங்களின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | 149 பிரிவு | சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல் ஒன்றிலிருந்து கடந்த ஆண்டு பெறுவனவின் 01 சதவீத வருமானத்தை பெற்றிருக்கவில்லை. | 2024 ஆண்டில் 01 சதவீத வருமானத்தை அறவிடுவதென. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (இ) | 2023 நவம்பர் 02 திகதிய இலக்கம் FC/PDP/01/01/2023-II இலக்க நிதி ஆணைக்குழு செயலாளரின் கடிதம் மற்றும் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 132 (ஐ) பிரிவு | விடய பொறுப்பு அமைச்சரின் முன்கூட்டிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது சபை நிதியத்திலிருந்து ரூபா 228,150 செலவில் பண்ட உதவிகள் பகிரப்பட்டிருந்தன. | நிகழ்சித் திட்டத்திற்காக நேரடி தலைப்பு ஓக்கீடு காணப்பட்டதால் விலைமணு கோரி மேற்குறித்த செலவில் நிகழ்சித் திட்டத்தை ஒழுங்குபடுத்தியதென. | சுற்றறிக்கை மற்றும் சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் அங்கீகாரம் பெற்று பணிகளை மேற்கொள்ள வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்ட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 28,356,264 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,076,675 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டு இருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 6,610,000 | 6,111,765 | 5,622,187 | 6,534,288 | 5,540,000 | 5,364,782 | 4,654,563 | 6,044,710 |
| (ii) | வாடகை | 3,313,475 | 680,565 | 683,391 | 128,557 | 3,313,475 | 1,830,956 | 2,006,906 | 131,383 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 1,082,000 | 777,850 | 768,350 | 9,500 | 885,850 | 832,410 | 749,260 | 83,150 |
| (iv) | ஏனைய வருமானம் | 39,773,000 | 36,110,421 | 30,459,593 | 27,740,611 | 22,742,000 | 30,120,325 | 30,902,650 | 22,089,783 |
| | மொத்தம் | 50,778,475 | 43,680,601 | 37,533,521 | 34,412,956 | 33,486,325 | 38,148,473 | 38,313,379 | 28,349,026 |

### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ரூபா 43 மில்லியன் வருமானம் பில்லிட்டிருந்ததுடன், கடந்த ஆண்டிற்குரிய நிலுவை பெறுவனவுடன் ரூபா 38 மில்லியன சேகரிக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டின் திசெம்பர் 31 திகதியன்று ரூபா 28 மில்லியனான நிலுவை வருமானம் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 34 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) வீதவரி**

| | | |
|---|---|---|
| வீதவரி அலகொன்றின் நிலுவை ரூபா 5,000 இலும் கூடிய 18 வீதவரி ஆதனங்களிலிருந்து அறவிட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 119,777 இனை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிவரை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த நிலுவை வீதவரியை அறவிட பிரதேச சபை சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை தொகையை அறிவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும். |

**(இ) நீர் கட்டணம்**

| | | |
|---|---|---|
| பிரதேச சபையின் 19 நீர் கருத்திட்டங்களில் 03 ஆண்டுகளை விஞ்சிய காலமாக அறவிட வேண்டிய ரூபா 2,258,646 பெற வேண்டிய நீர் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை அறிவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

**(ஈ) ஏக்கர் வரி**

| | | |
|---|---|---|
| அலகொன்றின் நிலுவை ரூபா 1,000 இலும் கூடிய ஏக்கர் வரி அறவிடப்படும் 31 ஆதனங்களிலிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிவரை ரூபா 52,106 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | எஞ்சிய தொகையை அறிவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை ஏக்கர் வரியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(உ) அறிவித்தல் பலகை கட்டணம்**

| | | |
|---|---|---|
| சபை அதிகார பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த 25 அறிவித்தல் பலகைகளிற்குரியதாக ஓராண்டிற்கு அதிக காலமாக நிலுவையாக காணப்படும் ரூபா 290,091 இனை அறவிட்டிருக்கவில்லை. | வாய் மூலம் போன்றே, எழுத்து மூலமும் அறிவுறுத்தப்பட்டுள்ளதென. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

**(ஊ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 26,198,100 மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,542,511 ஆனது. | முத்திரை கட்டண நிலுவை தொகை மற்றும நீதிமன்ற தண்டப்பணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நீதிமன்ற தண்டப்பணத்தை மற்றும் முத்திரை கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் ஒப்படைத்துள்ள கடமைகளை மேற்கொள்ளல்

பிரதேச சபை சட்டத்தின் 3 பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் பொது பாதைகள் மீதான நடவடிக்கைகளை முறையாக்கல் மற்றும் கட்டுப்படுத்தல், பொது மக்களின் நலன்கள், வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்த பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 19 நீர் கருத்திட்டங்களின் 4,100 நீர் பாவனையாளர்களிற்கு சுத்திகரிக்கப்படாத குடிநீர் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், நீர் மாதிரி பரீட்சிப்பும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 2024 ஆண்டில் நீர் மாதிரி பரீட்சிப்பை மேற்கொள்வதென. | நீரின் தரத்தை பரீட்சிக்க செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபை சட்டத்தின் 93 முதல் 95 வரையான பிரிவுகளின் பிரகாரம், அதிகார பிரதேச வீடுகளின் மலசல கழிவுகளை அகற்ற மற்றும் எடுத்துச் செல்ல தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும், மலசலத்தை அகற்றுவதற்காக தேவையான நிகழ்சித் திட்டமொன்றை மற்றும் அதற்குரிய கலி வண்டி சேவையை நடாத்திச் சென்றிருக்கவில்லை. | கலி பவுசரொன்றின் தேவைப்பாட்டை குறிப்பிட்டு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதென . | அதிகார பிரதேசத்தில் பொது மக்கள் சுகாதாத்தை பேணிச் செல்வதற்காக சட்டத்தின் பணிகளை மேற்கொள்ள வேண்டும் |
| (இ) | பிரதேச சபை சட்டத்தின் 119 பிரகாரம், குடியிருப்பாளர்களின் தேவைக்காக பொது சந்தைகள் அல்லது வாராந்த சந்தைகளை ஆரம்பித்து நடாத்திச் சென்றிருக்கவில்லை. | வாராந்த சந்தைகளை நடாத்த சபை முயன்றுள்ளதென. | வாராந்த சந்தைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் கலபொட நீர் வீழ்ச்சி சுற்றுலா வலயத்தில் நுழைவு சீட்டு விற்பனையால் ரூபா 1,033,400 வருமானம் ஈட்டியிருந்த போதும், அதற்காக துணைச் சட்டத்தை விதிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 ஆண்டில் துணைச் சட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதென. | துணைச் சட்டத்தை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு செப்டம்பர் 01 மற்றும் 02 திகதிகளில் சபையின் 27 அலுவலர்கள் திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் கழிவுத் கொட்டிலை பார்வையிடும் சுற்றுலா ஒன்றில் பங்குபற்றுவதற்காக ரூபா 281,255 செலவிட்டிருந்த போதும், சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவ அலகை | கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வது அத்தியசிய விடயமொன்றாகையால், சபை நிதியத்தால் செலவு செய்ததென. | பார்வையிடும் சுற்றுலாவின் அனுபவத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைக்காது தினந்தோறும் திரட்டப்படும் கழிவுகள் நாவலபிடிய நகர சபையின் கழிவுத் கொட்டிலிற்கு வெளியிடும் முறையை பின்பற்றியிருந்தது. அதன் பிரகாரம், பார்வையிடும் சுற்றுலாவிற்காக செலவிட்ட ரூபா 281,255 தொகை விளைவற்றதாக காணப்பட்டது. | | |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான பெகோ இயந்திரத்திற்கு ஏற்பட்ட நட்ட சேதம் தொடர்பாக ரூபா 173,747 தொகையை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிட தீர்மானித்திருந்த போதும், மீளாய்வாண்டு இறுதி வரையும் ரூபா 113,744 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப 02 தவணைகளை மாதாந்த சம்பளத்திலிருந்து அறவிட்டுள்ளதுடன், எஞ்சிய 08 தவணைகளையும் மாதாந்த சம்பளத்திலிருந்து அறவிடுவதென. | நட்டத்தை அறிவட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 06 நீர் கருத்திட்டங்களின் 587 பாவனையாளர்களிடமிருந்து 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக அறவிட வேண்டிய நீர் இணைப்பு கட்டணம் கூட்டுத் தொகை ரூபா 3,579,406 அறவிட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் பெற வேண்டிய வேலை கடன்படுனர் ரூபா 25,366,398 ஆண்டு 01 இற்கும் 05 இற்குமிடையிலான காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | பெற வேண்டிய மீதிகளை அறவிட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 33,657,568 ஆனது. அவற்றில் ஆண்டு 01 இற்கும் 05 இற்குமிடையிலான கால வீச்சிற்குரிய மீதி ரூபா 24,962,545 மற்றும் 05 ஆண்டுகளை விஞ்விய மீதி ரூபா 616,594 இனை தீர்த்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை செலுத்த நடவடிக்கை எடுப்பதென. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை வேண்டும். |
| (உ) | 2014 ஆண்டில் புர எழுச்சி கருத்திட்ட ஏற்பாட்டின் மீது ரூபா 1,500,000 இற்கு நிர்மாணிக்கப்பட்ட பலங்தொட வடக்கு சனசமூக | 2024 கணக்கினூடாக சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | கடன்படுனர் மற்றும் கடன்கொனர் பதிவழித்ததனை சரி செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிலையத்தை நிர்மாணித்த காணியை சுவீகரிக்கவில்லை என குறிப்பிட்டு ஒப்பந்தாரரிற்குரிய தொகையை செலுத்தாதிருந்ததுடன், ஒப்பந்ததாரரினால் தொடர்ந்தும் பணம் கோரியிருந்த போதும், கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர் ஆகியிருந்த இந்த தொகை கணக்குகளில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | | |

**3.4 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 177 பிரகாரம் டெண்டர் நடைமுறையை பின்பற்றாது 03 நிறுவனங்களில் இருந்து 05 முகங்களுடன் கூடிய செம்பு தெய்வ சிலையொன்றை கொள்வனவு செய்ய பெற்றுக் கொண்ட நேர் விலை மனுக்களை அடிப்படையாகக் கொண்டு குறைந்தபட்ச விலை முன்வைத்திருந்த நிறுவனத்திலிருந்து 1 ½ அடி உயரமான 05 முகங்களுடன் கூடிய செம்பு தெய்வ சிலையொன்றை பெற்றுக் கொள்ள அங்கீகரித்துக் கொண்டு ஒரு முகத்துடன் கூடிய செம்பு தெய்வ சிலையை பெற்றுக் கொண்டு வழங்குனர் நிறுவனத்திற்கு ரூபா 350,000 தொகை செலுத்தப்பட்டு இருந்தது. | தெய்வ சிலையை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் நிறுவனமொன்றிடமிருந்து நேர் விலை மனு பெற்றுக் கொண்டதுடன், தெய்வ சிலையை வழங்கும் நிறுவனம் எமக்கு அந்த சிலையை வழங்க முன்னர் கொடுப்பனவை செய்யுமாறு அறிவித்துள்ளதால், கொடுப்பனவு செய்துள்ளதென. | விதி பிரகாரம் செய்ற்பட்டு கட்டளை இட்டு பண்டங்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை** | | |
| அங்கீகார மற்றும் உள்ளவாரான ஊழியர் எண்ணிக்கையை ஒப்பிடுகையில் 07 பதவிகளில் 08 வெற்றிடங்களும் ஒரு பதவியில் 08 மிகைகளும் காணப்பட்டன. | தொடர்ந்தும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதென. | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள வேண்டும். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வு பெற்ற, பணி நீக்கம் செய்யப்பட்ட 03 அலுவலர்களிடம் இருந்து கூட்டுத் தொகை ரூபா 394,585 ஆன கடன் மீதியை 04 ஆண்டுகளாக அறவிட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிடுவதென. | சபைக்கு அறவிட வேண்டிய ஊழியர் கடனை அறவிட வேண்டும். |